සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development

සමාජ සවිබලගැන්වීම්, සුබසාධන හා කන්ද උඩරට උරුමය පිළිබඳ අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT, WELFARE AND KANDYAN HERITAGE

මගේ අංකය
எனது இல
My No

ඔබේ අංකය
உமது இல: ........................................
Your No

දිනය
திகதி :
Date

2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் 33(9) பிரிவின் பிரகாரம் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமைத்துவச் சபையின் அங்கிகாரக் குறிப்புக்கமைய வெளியிடப்படும் ஒழுங்கு விதிகள் : 2018 இலக்கம் 02

**கட்டாய சேமிப்புக் கணக்கிலிருந்து வைப்புத்தொகையினை விடுவிப்பதற்கான அதிகாரம் வழங்குதல்**

பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட 8/2017 இலக்க 2017.03.29 ஆம் திகதிய சுற்று நிருப ஆலோசனையின் 2(V) பந்தி கீழ்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

02. சமுர்த்தி வங்கிகளில் செயற்படுத்தப்படும் கட்டாய சேமிப்பு வைப்புக் கணக்கில் உள்ள தொகையில் ரூபா.25,000/= வரையான தொகையினை மாத்திரம் விடுவிப்பதற்கான அதிகாரம் வங்கி முகாமையாளருக்கு வழங்கப்படுகிறது. அவ்வாறு கட்டாய சேமிப்புத் தொகையினை விடுவிக்கும் போது சுற்று நிருப ஆலோசனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்கு மாத்திரமே வரையறுக்கப்பட்ட விதத்தில் விடுவித்தல் வேண்டும்.

03. கணக்குடையோனின் கோரிக்கைக்கு அமைய கட்டாய சேமிப்பு வைப்புத் தொகையினை கோரப்படும் காரணத்தை உறுதிப்படுத்தியதன் பின்னர் விடுவித்தல் வேண்டும். இங்கு தேவைக்கேற்ற விதத்தில் படிமுறை படிமுறையாக பணத்தை விடுவிக்க முடியும். பணத்தை விடுவிப்பது தொடர்பாக கட்டுப்பாட்டு சபைக்கு முன்வைத்து முன் அனுமதியினை (covering Approval) பெற்றுக் கொள்ள வேண்டியது கட்டாயமாகும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

04. மேலும் 2018ஆம் ஆண்டிலிருந்து கட்டாய சேமிப்பு வைப்பு பணத்தினை விடுவிப்பது தொடர்பாக கீழ்வரும் தகவல்களை உள்ளடக்கிய பதிவேடு ஒன்றினை செயற்படுத்திச் செல்லுமாறும் வேண்டப்படுகிறீர்.

i. கணக்குடையோனின் பெயர்
ii. முகவரி

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya ,Battaramulla

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General
Tel- 011-2873802/2872202
Fax - 011-2889002
E-mail- dg@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ (මානව සම්පත්) / பணிப்பாளர் ( மனிதவளம்) / Director (Human Resource)
011-2873799
011-2873996
diradmin@divineguma.gov.lk
Hot Line : 0112-889007

ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant
011-2869742
011-2869742
finance@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance)
011-2889003
011-2887469
Hot Line:0112-885582

කාර්යාලය / அலுவலகம் / Office
011-2887280
Hot Line: 011- 2887722

iii. கணக்கிலக்கம்

iv. பணம் விடுவிப்பதற்கான காரணம்

v. விடுவிக்கப்படும் தொகை(ரூபா)

vi. விடுவிக்கப்படும் திகதி

vii. கணக்கு எழுதுநரின் ஒப்பம்

viii. வங்கி முகாமையாளர் ஒப்பம்

ix. வேறு(படிமுறை படிமுறையாக விடுவித்தல் தொடர்பான குறிப்பு)

x. கட்டுப்பாட்டுச் சபையின் மேல் அனுமதி பெற்ற திகதி

05. வங்கி முகாமையாளாருக்கு வைப்புத் தொகையினை விடுவிப்பதற்கான அதிகாரம் வழங்கப்படுவது கணக்குடையோனின் கோரிக்கைக்கு அமைய அதனை துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதற்காகவே ஆகும். அதே போல் மக்கள் வங்கி / இலங்கை வங்கிகளில் செயற்படுத்தப்படும் வைப்புத் தொகை மற்றும் சமுர்த்தி வங்கியிலுள்ள கட்டாய சேமிப்புத் தொகையில் ரூபா.25,000/= இற்கு மேலான வைப்புப் பணத்தினை விடுவித்தல் தொடர்பான அதிகாரம் தொடர்ந்தும் மாற்றமின்றி பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

06. சுற்று நிருபத்தின் ஏனைய விடயங்களில் எவ்வித மாற்றங்களும் இல்லாது தொடர்ந்தும் செயற்படுத்தப்படும்.

கலாநிதி. சுனில் ஜயந்த நவரத்ன
தலைவர், சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமைத்துவச் சபை
பணிப்பாளர் நாயகம்,
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்.

Translated by – I.Aliyar